# விலைமனுக்களுக்கான அழைப்பு

# பரீட்சைகள் திணைக்களம்

## Procurement of supplying Envelopes and Brown Papers for a period of one year

### ஒப்பந்த இல.: 4/10/1/2018

1. கீழே குறிப்பிட்டுள்ள ஆகக்குறைந்த அனுபவத்தையுடைய தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு தபாலுறைகள் மற்றும் பிறவுன் தாள்களை வழங்கலுக்கான பெறுகைக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| Lot No. | Type | No. of items in the Lot |
|---|---|---|
| 1. | 8"x5" Manila window envelope (GSM 70) Printed | 300,000(300 packets of 1000 Nos.) |
| 2. | 9"x4" Manila window envelope (GSM 70) Printed | 2,000 (2 packets of 1000 Nos.) |
| 3. | 15"x10" Sack craft envelope – Printed (GSM 80) | 450,000 (450 Packets of 1000 Nos.) |
| 4. | 10.5"x7.5" Sack craft envelope (GSM 80) Printed | 150,000 (150 packets of 1000 Nos.) |
| 5. | 19.5" x 16.5" Brown Sack craft double envelope (GSM 80) Printed | 50,000 (50 packets of 1000 Nos.) |
| 6. | 30"x40" Brown Sack craft Paper (GSM 80) | 65,000 (260 packets of 250 Nos.) |
| 7. | 30"x40" Brown Sack craft Paper (GSM 100) | 12,500 (50 packets of 250 Nos.) |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் காகிதாதிகளை வழங்குவதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

4. ஆர்வமும் தகதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3 ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2785219) 2018.09.05 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

5. 2018.09.05 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 3000 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

7. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் புகழ் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியில் அமைந்ததாகவும் எழுபத்தையாயிரம் இலங்கை ரூபாவிற்கானதாகவும் (75,000 இ.ரு.) விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.

8. விலைமனுக்கள் 2018.09.06 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

9. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''தபாலுறைகள் மற்றும் பிறவுன் தாள்களின் வழங்கலுக்கான பெறுகை – 2018", ஒப்பந்த இல.: 4/10/1/2018 என குறிப்பிடப்படல் வேண்டும்.

10. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக எந்தவொரு வேளையிலும் அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எவ்வித கடப்பாட்டையும் சுமத்தாமல் பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு திணைக்கள பெறுகை குழுவின் செயற்பாட்டை அறிவிக்காமல் இருப்பதற்கான எவ்வித கடப்பாட்டையும் அதற்கான காரணத்தையும் திணைக்கள பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

**பரீட்சைகளுக்கான ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

16.08.2018